தம்புள்ளை பிரதேச சபை

மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்புள்ள பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஆம் ஆண்டின் நிர்மாணத் துறை கடன்பட்டோர் தொகை ரூபா 49,040 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டதை சரி செய்யும் போது திரண்ட நிதியில் வரவு வைத்து கடன்பட்டோரில் செலவு வைத்த காரணத்தால் அந்த இரண்டு கணக்குகளிலும் ரூபா 98,080 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு சீர் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (ii) | விஷேட தேவைகளை உடைய கிராமப்புற வேலைத் திட்டங்களின் கீழ் 05 நிர்மாணக்களுக்கு உரிய நிர்மாணக் கடன்பட்டோர் தொகை ரூபா 2,115,018 மற்றும் 03 நிர்மாணக் கடன்கொடுத்தோர் ரூபா 2,121,705 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு சீர் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (iii) | பிதுரங்கல கிராம மத்திய வீதி அபிவிருத்தி நடவடிக்கையின் நிர்மாணத்துறை கடன் கொடுத்தோர் ரூபா 1,200,000 கூடுதலாகக் காண்பிக்கப்படி பட்டிருந்தது. | கணக்கு சீர் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ரூபா 1,500,000 சுகாதார கழிப்பறையின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்கு சீர் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (v) | ரூபா 115,330 மொத்தப் பெறுமதியான இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை | கணக்கு சீர் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (vi) | பிரதேச சபையை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 24 நிர்மாணங்களுக்கு உரிய ரூபா 25,977,222 பெறுமதியான நிர்மாண கடன்கொடுத்தோர் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது | கணக்கு சீர் செய்யப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |

(ஆ) இணங்காத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டுள்ள 02 கணக்கு மீதிகளின் பெறுமதியை அந்தக் கணக்கு மீதிகளுக்கு உரிய ஆவணங்களின் மீதிக்கு இடையே ரூபா 17,838,538 தொகை இணங்காமல் காணப்பட்டது. | கணக்கு மீதிகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட ஆவணங்களின் மீதிகள் ஒப்பிட்டுப் பார்த்து சரி செய்யப்பட வேண்டும். | உரிய கணக்கு சரி செய்யப்படும் என்பதை அறியத் தருகிறேன். |

(இ) தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 12,587,598 பெறுமதியுடைய களஞ்சியசாலை தொங்கல் கணக்கின் மீதியானது மீளாய்வாண்டிலும் தீர்க்கப்படாமல் முன் கொண்டு வரப்பட்டிருந்தது. | களஞ்சியசாலை தொங்கல் கணக்கின் மீதி தோன்றுவதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு சரி செய்யப்பட வேண்டும். | பிரதேச சபை ஆரம்பிக்கப்பட காலம் முதல் களஞ்சிய பெறுவனவுகள் களஞ்சிய சாலைக் கணக்கில் இடப்பட்டுள்ள போதிலும் வழங்கல் கட்டளைகளின் பிரகாரம் வழங்கப்பட்ட பண்டங்களின் பெறுமதி யானது கணக்கிலிருந்து நீக்கப்படாத காரணத்தால் களஞ்சியசாலை கணக்கின் மீதிக்கு உரிய உப ஆவணங்கள் தயாரிக்கப் படவில்லை. ஆகவே |

| | | |
|---|---|---|
| | | தற்போதைக்கு களஞ்சிய கணக்கின் மீதியானது தொங்கல் கணக்காக தனியாகக் காண்பிக்கப்பட்டு ஆண்டுக்குரிய பெறுகை மற்றும் வழங்கல்களுக்கு ஏற்ப வேறொரு கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளதாக அறியத் தரப்பட்டுள்ளது. |

(ஈ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 41,243,599 உடைய கணக்கு வகைகள் 06 இற்குரிய ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக் கும் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

1.4 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு | இடம் மாற்றலாகிச் சென்ற் உத்தியோகத்தரி டமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 252,460 ஆன கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | எஞ்சியுள்ள ஊழியர் கடனை அறவிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதி பிரமாணம் 104 (1) | 02 வாகனங்கள் மீளாய்வாண்டில் விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் விசாரணைகள் நடத்தப்பட்டு பொறுப்பாளர்கள் எவரும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நி.பி பிரகாரம் பொறுப்பாளர்கள் உறுதிப் படுத்தப்பட வேண்டும். | விசாரணையைத் தொடங்குவதற்குத் தேவையான விசாரணை உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2018 திசெம்பர் மாதம் 28 ஆம் திகதிய 2104 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி | 2019 ஆம் ஆண்டில் தம்புள்ளை பிரதேச சபைக்குள் அடங்கும் பிரதேசங்களை அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக நிர்ணயித்து மதிப்பீட்டுத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வீதவரியை அறவிட நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். | வரி மதிப்பீட்டு வலயமாகக் கண்டறியப்பட்டு உரிய தகவல்கள் வரைபடமாக்கப்பட்டு இருப்பதோடு வரி மதிப்பீட்டின் பின்னர் வரித் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,922,945 ஆக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,149,682 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,000,000 | 2,000,000 | - | 2,000,000 | - | - | - | - |
| (ii) | வாடகை | 2,145,000 | 2,402,542 | 2,402,542 | - | 1,950,000 | 1,965,000 | 1,965,000 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 26,687,550 | 27,203,607 | 26,010,278 | 1,193,329 | 16,426,150 | 16,459,450 | 15,958,699 | 500,751 |
| (iv) | ஏனைய வருமானம் | 46,481,800 | 24,331,307 | 12,014,375 | 12,316,932 | 25,528,250 | 22,768,600 | 14,683,030 | 8,085,570 |
| | மொத்தம் | 77,314,350 | 55,937,456 | 40,427,195 | 15,510,261 | 43,904,400 | 41,193,050 | 32,606,729 | 8,586,321 |

2.2.2 கேள்வி கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாகன நிறுத்துமிடங்கள் 02 இலிருந்து 15 ஆண்டுகளாக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 1,029,120 தொகையான கேள்வி கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எஞ்சியுள்ள கேள்விக் கட்டணங்கள் உடனடியாக அறவிடப்படல் வேண்டும். | தகவல்களைக் கண்டறிந்த உடனே அறவிட நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகிறேன். |

2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய சுற்றுலா விடுதி வரி ரூபா 914,529 தொகையும், சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 97,800 தொகையும், விளம்பரப் பதாகைக் கட்டணம் ரூபா 181,000 தொகையும் நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் | உரிய நிலுவைக் கட்டணங்களில் தற்போது ரூபா 1,014,729 தொகை அறவிடப்பட்டுள்ளதோடு செலுத்தப்படாத நிலுவைத் தொகை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகிறேன். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டம் 126 பிரிவின் கீழ் 30 பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் எனினும் 2019 திசெம்பர் 31 வரை 19 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிரயோகிக்கப்பட்டிருந்தன. | அனைத்து உப விதிகளும் பிறப்பிக்கப்பட்டு சபையின் செயற்பாடுகள் திறமையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | இப்போது வரைக்கும் உப விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக எதிர் வரும் காலத்தில் உப விதிகளைப் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகிறேன். |

(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக 2019 ஆம் ஆண்டில் குறுங் காலச் செலவாக ரூபா 7,791,677 செலவழிக்கப்பட்டிருந்ததோடு உக்காத பொருட்களை விற்பதற்கோ முறையாக அப்புறப்படுத்தவோ தேவையான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கழிவு முகாமைத்துவம் முறையாக நிறைவேற்றப்படல் வேண்டும். | உக்காத பொருட்களை முறையாக வேறுபடுத்தி அப்புறப்படுத்தும் இடமொன்றிற்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடப்பட்டிருந்த சீகிரிய வாகனத் தரிப்பிடத்தின் வாடகையாக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 398,294 தொகையை செலுத்தாமல் தவிர்த்த காரணத்தால் சம்பந்தப்பட்ட குத்தகைதாரருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியான நடவடிக்கைகள் உடனடியாக பூர்த்தி செய்யப்பட்டு நிலுவை வாடகைத் தொகை அறவிடப்படல் வேண்டும். | தொடரப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆஜராகாததால், சம்பந்தப்பட்ட வழக்கு (MR - 327) ஒதுக்கி வைக்கப்பட்டு, மேன்முறையீட்டில் அதை மீண்டும் விசாரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **2018** பொருள் மெய்மையாய்வு மூலமாகக் கண்டறியப்பட்ட ரூபா **389,195** நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் **104** இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்பானவர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | இது சம்பந்தமாக நிதி பிரமாணம் 104 பிரகாரம் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அதற்கிணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன் என்பதை அறியத் தருகிறேன். |

3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை ஊழியர்கள் | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் **31** வரை **10** பதவிகளில் **17** வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| இட மாற்றம் பெற்றுச் சென்ற பெண் ஊழியர் ஒருவரிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 252,460 பெறுமதியான கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன்கள் உடனடியாக அறவிடப்படல் வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 செயலற்ற மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு உரித்தான **05** வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன. | செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்களை ஏலத்தில் விற்பதற்கு அல்லது பொருத்தமான வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இந்த இயந்திரங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

3.6 பெறுகை

### 3.6.1 வழங்களும் சேவைகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டுதல் கையேட்டின் 3.4.(3) (இ) பிரகாரம் சந்தை விலை மனுக் கோரல் வழி முறையின் கீழ் கொள்வனவு செய்யப்படும் போது கொள்வனவு நிறுவனத்தினால் இருப்பினால் பட்டியலில் காண்பிக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அவ்வாறு செய்யப்படாமல் மீளாய்வாண்டில் 04 சந்தர்ப்பங்களில் ரூபா 754,535 பெறுமதி தொகைக்கு பண்டங்களும் உபகரணங்களும் வாங்கப்பட்டிருந்தன. | பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். இந்தக் கொள்வனவுகளில் மின்சார உபகரணங்கள் மற்றும் வாகன டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பது பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து தான் என்பதை அறியத் தருகிறேன். |